**தலைப்பு 122 – சுற்றுலா மற்றும் காணி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்து அதனைக் அடிப்படையாகக் கொண்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செலவினங்கள் செய்யப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 653,000,000 தேறிய நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 71,262,395 ஆக இருந்ததுடன் அது சத வீதமாக 11 வீதமும், மூலதன செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,732,000,000 தேறிய நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 740,691,144 ஆக இருந்ததுடன் அது சதவீதமாக 27 வீதமாக இருந்தது. | மதிப்பீடு அத் திகதியில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் எதிர்வு கூறப்பட்டு நிதி ஏற்பாடு கோரப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் பற்றாக்குறை, போக்குவரத்து வசதியினம், அலுவலகங்கள் திறக்கப்படுகின்ற நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை, உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைத்தல் வரையறுக்கப்பட்டமை, விசேஷட விடுமுறை தினங்களை வெளியிட்டமை போன்றவற்றின் காரணமாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் அந்த முறையில் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட அரச வரவு | மதிப்பீடுகளை இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவுத்திட்ட சுற்றறிக்கை 3/2021, 3/2022, 4/2022 என்பவற்றில் உள்ளடக்கிய செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை மூலம் வெளிநாட்டு பிரயாணங்கள் கைவிடப்பட்டமை, மூலதன கொள்வனவுகளை மேற்கொள்ளல் மற்றும் மூலதன செலவினங்கள் வரையறுக்கப்பட்மை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் ஏனைய செலவினங்களை செய்தமை, 2022 ஆம் ஆண்டின் நடு அரைப் பகுதியில் சுற்றுலாத்துறை அமைச்சு, காணி அமைச்சு என்பவற்றை ஒன்றிணைத்ததன் மூலம் ஒரு அமைச்சரின் நிதி ஏற்பாடு சேமிக்க வேண்டி ஏற்படடிருந்தது. அதன் பிரகாரம் மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 11 சதவீதமும், மூலதனச் செலவினத்திற்காக ஒருக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 27 சதவீதமும் சேமிக்க வேண்டிய ஏற்பட்டிருந்தது. | |
| (ஆ) | 11 செலவின விடயங்களுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 316,725,000 ஆன நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைவிடப்பட்டமை மற்றும் அமைச்சர் வாடகை வீடு கோரப்படாமையின் அடிப்படையில் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 3/2022 இன் பிரகாரம் செலவின முகாமைத்துவம் மற்றும் நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார நிலைமையின் அடிப்படையில் செலவினங்கள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அமைச்சரின் செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகார கம்பனியால் விலைகள் அதிகரித்துச் சென்றமை கோரிக்கையிடப்பட்ட போதும் அதற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் கட்டுநிதி வழங்குவதற்கு இணங்காமையின் | மதிப்பீடுளை இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 09 செலவின விடயங்களுக்குரியதாக வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 60,615,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 52,552,198 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 75 சதவீதத்தை விஞ்சிக் காணப்பட்டது. | மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 75 சதவீத்திற்கு மேற்பட்டு சேமிப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட செலவினம் காணிப் பிரிவின் மூலம் செய்யப்பட்டமை, நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமையினால் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமையினால் வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செலவின முகாமைத்துவம் செய்யப்பட்டதன் காரணமாக செலவின விடயங்களில் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. அமைச்சரின் உத்தியோகபூர்வ வீட்டிற்கான நீர் அல்லது மின்சாரப் பட்டியல் செலுத்துவதற்கு சமர்ப்பிக்காமை மற்றும் அமைச்சரின் அலுவலகத்தில் சிறு பழுதுபார்த்தல் தேவையொன்று ஆண்டில் ஏற்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுளை இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சலில், பௌதீக சொத்துக்கள் நிர்மாணம், கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பெற்றுதல் பெறுமதியான ரூபா 41,384,298 தொகையில் இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 7,282,743 மீண்டெழும் வடிவிலான செலவினங்கள் உள்ளடக்கப்பட்டமையால் உரிய செலவின | மூலதன செலவின நிகழ்ச்சித்திட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் மொத்த செலவினம் ரூபா 41,384,298 ஆகும். அதன் பிரகாரம் மூலதன செலவினங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பெற்றுதலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் உரிய செலவின விடயத்தில் செலவினங்கள் அதிகரித்து காண்பிக்கப்படவில்லை. நிதிக் கூற்றின் படிவம் ACA 2(ii) இன் பிரகாரம் மூலதன சொத்துக்களின் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குரிய செலவின | செலவினங்கள் சரியான செலவின விடயத்தில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| தலைப்பின் செலவினம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | விடயமான 2001, 2002 மற்றும் 2003 இலும், அரச முதலீட்டு செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளமையால் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அவ்வாறு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குரிய இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் வானப் பழுதுபார்த்தல்களுக்காக ஏற்பட்ட செலவினம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசம்பர் என்ற இரண்டு மாதங்களுக்காக சுத்திகரிப்பு சேவைகளுக்காக ரூபா 305,900 பெறுமதிசேர் வரி பொறுப்பொன்று இனங்காண வேண்டி இருந்த போதும் பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 156,774 ஆக ரூபா 149,126 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நவம்பர் பட்டியல்கள் மாத்திரம் இருந்தமையால் பொறுப்பாக அந்த பட்டியல் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததை தயவுடன் அறியத் தருகின்றோம். | ஆண்டிற்குரிய சகல பொறுப்புக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவை | | | | |
| (i) XXIV அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பந்தி | 159,800 | மீளச் செலுத்தி பூர்த்தி செய்யப்படாத கடன் தொகையில் அறவிடுவதற்கு எஞ்சிக் காணப்பட்ட தொகையும், அரசாங்கத்திற்கு அல்லது லோஹோர் சீமாட்டி நிதியத்திற்கு செலுத்தப்படுகின்ற ஏனைய தொகைகளும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து விசாரணை செய்து உத்தியோகத்தரின் ஒன்றிணைந்த ஓய்வூதியச் சம்பளத்தில் அல்லது பணிக்கொடைப் பணத்திலிருந்து அறவிட வேண்டியிருந்த போதும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் 1-2 வருடங்களுக்கிடையிலான கடன் நிலுவையான ரூபா 159,800 தொகை 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் சுற்றுலாத்துறையின் கடமைகளைச் செய்து 2021.02.05 ஆம் திகதியில் இருந்து ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 159,800 தொகையை தீர்த்து வைக்குமாறு 2023.03.16 ஆம் திகதி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 253,578 | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் இருவரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 253,578 கடன் மீதி தொடர்பாக கடனாளிகளிடமிருந்து அறவிட முடியாத சந்தர்ப்பத்தின் போது பின்பற்றப்படவேண்டியதான குறித்துரைக்கப்பட்ட வழிகளான பிணையாளர் தொடர்பாக நடவடிக்கை எடுத்து | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் முகவரி பிழையானதாகும். அவ்வாறு இந்த அமைச்சிலிருந்து கடன் பெறப்படவில்லை. அதனால் இந்த அமைச்சசுக்கு இடமாற்றலாகி | தாபன விதிக்கோவையின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அந்தப்பணத்தை பிணையாளரிடமிருந்து அறவிட முடிந்ததுடன் பிரதான கடனாளி மரணமடைவாராயின் அவரின் உரிமையாளரிடமிருந்தும் அறவிடமுடியாததாயின் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்க வில்லை. | வருகைதந்த பொலிஸ் தலைமையகத்திலிருந்து விபரங்கள் கோரி உரிய கடன் மீதியை பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. சேவையை விட்டுச் சென்ற திரு கே. மனுவெல் என்பவர் சாதாரண வினைத்திறனின்மையின் அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டடிருந்தது. நிலுவை கடன் மீதியை அவரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு கோரப்படாத சான்றிதழில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103(1) (ஆ) | 353,600 | நிறுவனத்தின் அவசர விபத்து தொடர்பான திடீர் விபத்துத் தொடர்பாக பொலிசுக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் ரூபா 353,600 கூட்டுத் தொகையான 02 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த விபத்துக்கள் இரண்டும் தொடர்பாக அமைச்சு அல்லது பொலிசுக்கு அறிவிக்கப்படாதிருந்தது டன் மீண்டும் வாகனம் கையளிக்கும் போது நட்ட இழப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | திடீர் விபத்துக்கள் பொலிசுக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 103(1) (ஊ) | 462,800 | இழப்புத் தொடர்பாக பரிசோதனை நடாத்தி பொறுப்பு வாய்ந்தவரை தீர்மானிக்க வேண்டி இருந்ததுடன் KI-1527 என்ற வாகனம் 2018 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி மத்துகம பிரதேச சபை வாகனத்தரிப்பிடத்தில் ஏற்பட்ட விபத்து தொடர்பான இறுதி அறிக்கையின் பிரகாரம் அந்த வாகனத்தில் பிரயாணம் செய்த காணி மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரின் இணைப்பு செயலாளர் பொறுப்பாக இருந்தமை தீர்மானிக்கப்பட்டு அந்த நட்டத்தின் பெறுமதி ரூபா 462,800 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதும் 2023 ஏப்ரல் 06 கணக்காண்வு வரையிலும் நட்டம் அறவிடப்படடிருக்க வில்லை. | KI-1527 வாகனத்தின் 2018.08.20 ஆம் திகதிய விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இறுதி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் வாகனம் வழங்கப்பட்டிருந்த இணைப்புச் செயலாளர் பொறுப்பாக இருக்க வேண்டி தீர்மானிக்கப்பட்ட பின்னர் வாகனத்தை பழுது பார்ப்பதற்காக செலவான ரூபா 462,800 தொகையை செலுத்துமாறு அந்த உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக மத்துகம பொலிசினால் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று நடாத்தப்படுகின்றமையால் அந்த வழக்கின் இறுதியில் அறவிடுதல் தொடர்பாக கவனத்தில் கொள்ளுமாறு அந்த உத்தியோகத்தரால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. தற்போது இது தொடர்பாக மத்துகம பொலிஸிலிருந்து அறிக்கை கோரி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 104(3) | 316,400 | அமைச்சின் அலுவலகத்தில் ரூபா 316,400 பெறுமதியான பொருட்பதிவேட்டு பொருட்களில் 30 விடயங்கள் 2022 மே 09 ஆம் திகதி தீயினால் அழிவடைந்தமைக்கு மற்றும் பொருட்பதிவேட்டின் 50 விடயங்கள் பற்றாக்குறை காணப்பட்டமை தொடர்பாக | இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள தீயினால் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக நிதிப்பிரமானம் 104(4) இன் பிரகாரம் இறுதிப்பரிசாதனை சபை நியமிக்கப்பட்டுள்ளதுட | தாமதமின்றி பரிசோதனைகளை பூர்த்தி செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பிடமிருந்து நட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ன் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | அறவிடப்படுதல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 109(1) | 2,031,327 | வருமானங்கள், காப்புறுதி மற்றும் பிணை போன்ற சகல வழிகளிலிருந்தும் அறவிடவேண்டிய பணத்தின் அளவை தீர்மானிக்கும் போதும், உள்ளடக்கிய சகல ஆரம்ப நடவடிக்கைகளிலும் முடிவு செய்யப்பட்டதன் பின்னர் இழப்பிலிருந்து அறவிடவேண்டிய ஆகக் கூடிய பெறுமதி மற்றும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்படுகின்ற பணத்திற்கிடையே ஏதாவது வேறுபாடுகள் ஏற்படுமாயின் அந்த வேறுபாடு புத்தகத்தில் அகற்றுவதற்கும், நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 2,031,327 கூட்டுத் தொகையான பத்து சந்தர்ப்பங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமானம் 104(4) இன் பிரகாரம் இறுதி பரிசோதனை அறிக்கையை நடாத்துவதற்காக பரிசோதனை சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் பரிசதனை அறிக்கையைப் பெற்று நிதிப்பிரமாணம் 109(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | ஏற்பட்டுள்ள நட்டங்கள் தாமதமின்றி புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 1647(உ) | | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தர்ளினால் தமது பொறுப்பிலுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பாக அந்தந் வாகனத்தின் வகை மற்றும் வடிவம், பதிவு இலக்கம், தமக்கு கையளிக்கப்பட்ட திகதி கையேற்கப்பட்ட திகதி மற்றும் அது தொடர்பான விபரங்களும் ஏனைய தகவல்களையும் பேணிச் செல்கின்ற பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லைல. | சுற்றுலாத் துறையின் வாகனங்களின் தகவல்கள் உள்ளடக்கிய தகவல் முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது இணைய வழி முறைமையில் உரிய தகவல்கள் பெறக்கூடியதாக உள்ளது. எனினும் சுற்றுலாத் துறையில் புதிய கட்டடமொன்றை இஸ்தாபித்ததன் காரணமாக உள்ளக வலைமைப்பு இணையதள | மோட்டார் வாகனப் பதிவேடொன்று பேணிச்செல்லப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையினால் உரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | |
| (இ) | அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய இலக்கம் 05/2008 என்ற சுற்றறிக்கை | அமைச்சினால் பிரஜைகள்/சேவை நலனாளி விஞ்ஞாபனமொன்று தயாரித்து அது பொதுமக்களுக்கு தெரியும் வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021.12.29 ஆம் திகதி அளவில் அமைச்சு பிரஜைகள்/சேவை நலனாளிகள் விஞ்ஞாபனத்தை தயாரித்து அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் காட்சிப்படுத்தியுள்ளது. மிஹிகத்த மெதுர கட்டிடத்தில் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் காணி அமைச்சின் இஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் பிரஜைகள் விஞ்ஞாபனத்தை காட்சிப்படுத்துவது எந்த இடத்தில் என காணப்பட்ட பிரச்சினையின் அடிப்படையில் மற்றும் அமைச்சின் பணிப் பொறுப்புக்கள் சுற்றுலா மற்றும் காணியாக -தப்பட்டமையில் மேற்கூறப்பட்ட காணி அமைச்சுக்குரியதாக தயாரிக்கப்பட்ட பிரஜைகள் விஞ்ஞாபனத்தை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் தற்போது அரச | சுற்றறிக்கை ஆலோசனையின் படி பிரஜைகள்/ சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம் பொது மக்களுக்கு பார்க்கக் கூடிய வகையில் காட்சிப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலவினங்களை வறையறுத்தல் சுற்றறிக்கை அடிப்படையில் அத்தியவசியமற்ற செலவினங்களை வறையறுக்கவேண்டி ஏற்பட்டிருந்தமையால் பிரஜைகள் விஞ்ஞாபனம் அச்சிடப்பட்டிருக்க வில்லை. | |
| (ஈ) | 2022 ஏப்ரல் 04 ஆம் திகதிய இலக்கம் 05/2022 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | அமைச்சின் சுற்றுலா துறையின் நிலையான சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் Cigas நிகழ்சித் திட்டத்திற்கு நிலையான சொத்துக்கள் மொடியூல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளமையால் நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்வதற்கு கட்டாயமில்லையாக என்றிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச்செல்லப்படல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் சேமலாபம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக குறித்துரைத்த பங்களிப்புப் பணம் உரிய மாதம் முடிவடைந்து 14 நாட்களுக்குள் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் சனவரி மாதத்தில் ஊழியர் | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் வடமத்திய மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட சேதனப் பசளை செயற்திட்டத்தின் ஊழியர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் யூன் மாதத்தில் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ரூபா 1,290,950 தொகையும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 154,304 தொகையும் ஆக ஒதுக்கப்பட்டிருந்த | தாமதமின்றி நிலுவைப் பணத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் அனுப்புதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமலாப நிதியமாக ரூபா 1,682,865 மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ரூபா 154,304 ஆக கூட்டுமொத்த பங்களிப்புப் பணமான ரூபா 1,837,169 அந்த நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்படாமல் அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் அவ்வாறு செலுத்தாத பணத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து மிகைக் கட்டணம் அறவிட வேண்டி இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | தொகையாகும். இந்த செயற்திட்டம் முடிவடையும் வரை அந்த ஊழியர்களுக்கு உரிய B படிவப் பத்திரம் தயாரித்து அல்லது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு சேவை வழங்குனராக பதிவு செய்தலும் மேற்கெள்ளப் படாதிருந்ததுடன் தற்போது அந்த மாதிரிப் பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு தொழில் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவால் நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகள் முடிவடைந்ததும் நிதியத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் கணக்கொன்றில் தொங்கலாக வைக்கப்பட்டுள்ள தொகையை விஞ்சிய வைப்பாக கருதப்படுகின்ற பெறுவனவுகளுக்காக இடமளிக்கப்படாமல் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பிரகாரம் உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய அல்லாத விஞ்சியிருந்த மீண்டும் விரைவாக மீளச் செலுத்த வேண்டியிருந்த போதும் சேதனப் பசளை செயற்திட்டத்திற்குரிய கொடுப்பனவு களுக்காக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சேதனப் பசளை செயற்திட்டத்திற்குரிய கொடுப்பனவுகளுக்காக விநியோகிகப்பட்ட ரூபா 33,869,485 பெறுமதியான 61 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பித்து அது பொது வைப்புக் கணக்கில் செலவு வைப்பதற்கு கோரிக்கை கிடைத்திருந்தது. மீண்டும் செலுத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்து இலக்கம் 03/12/8 இன் மூலம் 2023.02.28 ஆந் திகதிய மற்றும் இலக்கம் | தாமதமின்றி வைப்புக்கள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 33,869,485 தொகை 2022 ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | 3/1/2 இன் மூலம் 2023.04.04 ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |

**2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் 06 மாதங்களை விஞ்சிய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை இனங்கண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்த போதிலும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் வங்கிக் கணக்கில் ரூபா 24,666 பெறுமதியான காசோலை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 24,666 ஆன காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | காசோலை இரத்துச் செய்யப்பட்டு செலுத்துவதற்கு உள்ள தொகை கடனாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1950 இன் 09 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டம் மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க அளவிடல் சட்டம் தொடர்பாக திருத்தப்பட்ட சட்ட வரைவு வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் அந்த திருத்த சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1950 இன் 09 ஆம் இலக்க காணி கைப்பெற்றல் சட்டம் திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் சட்ட வரைவு செய்யப்படுகின்றது. 2002 இன் 17 ஆம் இலக்க அளவிடல் சட்ட திருத்தத்திற்காக நில அளவையாளர் திணைக்களத்திலிருந்தும் அளவிடை சபையிலிருந்தும் கிடைக்கப்பெற்ற | விரைவாக உரிய சட்டதை அங்கீகரித்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முன்மொழிவுகள் கலந்துரையாடப்படுகின்றது. | |
| (ஆ) | 2022 இன் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துறுதி பதிவு செய்தல் சட்டம் தொடர்பாக நீதி அமைச்சின் ஆலோசனையைப் பெற்று தேவையான திருத்தங்கள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் 1979 இன் 43 ஆம் இலக்க அரச காணிகள் கையளித்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்த வேண்டிய பிரிவுகளை இனங்கண்டு அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1998 இன் 21 ஆம் உரித்துறுதி பதிவு செய்தல் சட்டத்திற்காக திருத்தங்கள் இனங்காட்டப் பட்டிருந்தா எனவும் புதிய சட்டம் அதற்காக இனங்காணுதல் பொருத்தமானதா எனவும் தீர்மானிக்க வேண்டியது நீதி அமைச்சினால் 2023.02.24 ஆம் திகதி நடைபெற்ற செயலமர்வின் கலந்துரையாடலுக்கு உட்பட்டிருந்தது. அது தொடர்பாக எதிர்காலத்திலும் கலந்துரை யாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 1979 இன் 43 ஆம் இலக்க அரச காணிகள் மானியம் (விஷேட ஏற்பாடுகள்) சட்ட திருத்தங்களை இனங்காண்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது. | விரைவாக உரிய சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் காணி கைப்பெற்றிக் கொள்வதற்கு குருநாகல், புத்தளம், இரத்தினபுரி மற்றும் கேகாலை என்ற 04 மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 234,722,810 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 74,703,644 தொகை பயன்படுத்தப்பட்டு ரூபா 160,019,166 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பின் சதவீதம் 50 இற்கும் 79 சதவீதத்திற்கும் இடையிலான பெறுமதியைக் கொண்டிருந்தது. | ஆண்டின் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் கட்டுநிதி விடுவிக்காமையின் அடிப்படையில் ரூபா 160,019,166 சேமிக்கப்பட்டுள்ளது. கட்டுநிதி விடுவித்தல் திறைசேரியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2022 இல் மாவட்ட செயலாளருக்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்ட போதும் கட்டுநிதி வழங்கப்படாமையின் அடிப்படையில் ஆண்டில் | திட்டமிடப்பட்ட பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதிகமான நிதி அளவு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படுகின்றது. | |

**3.2 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஒரு விவசாய, வணிக, சுற்றுலா மற்றும் ஏனைய சேவைகளை உற்பத்தி செய்கின்ற பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கின்றதைப் போன்று தொழில் முயற்சிகளுக்கான இயலுமை இருந்த போதும் அதற்கான ஆரம்ப ஆராய்ச்சிகள் அரச உதவிகள் இன்னும் கிடைக்காதிருந்தமையினால் தெரிவு செய்து அவர்களுக்கு காணி உரித்துறுதிகளை வழங்குதல் மூலம் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்குத் தேவையான நிறுவனம் சார்ந்த உதவிகளை வழங்கும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட இளைஞர் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தின் காணிகளில் முதலீட்டு சந்தர்ப்பங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது 20,000 காணிக் கூறுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு பௌதீக ரீதியில் காணிகளை வழங்கும் போது 03 களுத்துறைக்கும், 04 காலிக்கும், 28 குருநாகலுக்கும், இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு 06 வீதமும் ஆக 47 காணிக் கூறுகள் வழங்கப்பட்டிருந்தது. அது திட்டமிடப்பட்ட அளவில் 50 சதவீதம் ஆன குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இலங்கையில் இளைஞர் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அசாங்கத்தின் காணிகளில் முதலீட்டு சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு கோரப்பட்ட போதும் இந்த செயற் திட்டத்திற்காக பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் ஆண்டின் இறுதி வரையில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு இயலுமான மொத்த காணிக் கூறுகளின் எண்ணிக்கை 1,119 அளவில் வரையறுக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **சேதனப்பசளை செயற்திட்டம்** | | |
| (i) | கடந்த ஆண்டின் போது ரூபா 350,000,000 நிதி ஏற்பாட்டை செலவிட்டு அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் சேதனப்பசளை செயற்திட்டத்தை ஆரம்பித்து அதற்காக ரூபா 31,027,575 பெறுமதியான பயிர்ச் செய்கை இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படடிருந்தன. மீளாய்வாண்டின் போது இந்த செயற்திட்டம் மூடப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக அல்லது சொத்துளை மீண்டும் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பாக 2023 ஏப்ரல் 10 வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.04.22 இல் உள்ளவாறு சொத்துக்கள் பதிவேடு, சேதனப்பசளை உற்பத்தி பூர்த்தி செயற்திட்டத்தின் 33 நிலையங்களின் விவசாய அமைப்புக்களுக்கு கையளிப்பதற்கு உரியதாக தயாரிக்கப்பட்ட சொத்து பதிவேடாகும். அதாவது இலக்கம் 9/2/6/1-vol iii மற்றும் 2022.04.22 ஆம் திகதிய கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உரிய இணைப்பாகும். இந்த பதிவேட்டில் ஒயாமடுவ களஞ்சியம், சேனாநாயக்க களஞ்சியம் மற்றும் அலுவலக களஞ்சியத்திலுள்ள உபகரணங்கள் பொருட்கள் உள்ளடக்கப்படா திருந்தமையும் அவ்வாறு உள்ளடக்கப்படாமைக்கு காரணமாக அந்த களஞ்சியம் அந்த சந்ர்ப்பத்தில் விவசாய அமைப்பிற்கு கையளிப்பதற்கு கருதப்படாமையினால் இருந்தமையும் மேலும் தயவுடன் அறியத்தருகின்றோம். | சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வடமத்திய மாகாணத்தில் | 2023.03.28 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பு அமைச்சு செயலாளரின் | சுயாதீன முழுமையான விசாரணை ஒன்றை |

அமுல்படுத்தப்பட்ட சேதனப் பசளை செயற்திட்டம் பூர்த்தி செய்து வளங்களை அகற்றுதல் தொடர்பாக 2023 மார்ச் 28 ஆம் திகதிய அமப/23/0383/615/017 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி இந்த செயற்திட்டம் தோள்வி அடைவதற்கு காரணமாக இருந்த விடயங்கள், நிதி பயன்படுத்தப்பட்டுள்ள முறை மற்றும் அதற்காக பங்களித்த தரப்பினர் தொடர்பாக சுயாதீனமாக முழுமையான விசாரணை மேற் கொள்வதற்கும், உரிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக பொருத்மான முன்மொழிவு களுடன் அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும் அமைச்சு செயலாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மூலம் 2023.04.17 ஆம் திகதி கிடைத்து அந்த திருத்தத்தின் பிரகாரம் எதிர்வரும் மிகுதி நடவடிக்கைகளை மிகவும் விரைவாக எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம்.
செயற் திட்டம் தொடர்பாக ஆழமாக அய்வு செய்து செயற்திட்டம் கைவிடப்பட்டமைக்கு தாக்க மளித்த காரணங்கள் மற்றும் நிதியின் பயன்பாடு மற்றும் பங்களித்த தரப்பினர் தொடர்பாக கவனம் செலுத்தி சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்வதற்காக புலனாய்வுக் குழு ஒன்று 2023.04.29 ஆம் திகதிய கலந்துரையாடலின் போதும் மற்றும் எனது கையொப்பத்துடனும் நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவிற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சு செயலாளர் மற்றும் அமைச்சின் மேலதிகச் செயலாளர், பிரதான நிதி உத்தியோகத்தர் மற்றும் தேசிய சேதனப் பசளைகள் செயலகத்தின் நிறைவேற்று மட்ட உத்தியோகத்தரும் உள்ளடக்கி இருந்தன. உரிய விசாரணை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

செயற்திட்டம் தொடர்பாக ஆழமாக ஆய்வு செய்யவேண்டியிருந்தமையால் அதன் பிரகாரம் அமைச்சரவைக் குறிப்பின்படி விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக போதியளவான காலம் எடுக்கின்றதாகவும் குழுவின் தலைவர்

மேற் கொண்டு அதன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | அறிவித்திருந்ததுடன் விசாணை அறிக்கைகளை வழங்குவதற்காக ஆகக் குறைந்த 06 வார அளவிலான காலம் தேவையாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த அறிக்கை கிடைத்த பின்னர் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (iii) | சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக இலங்கை வங்கி அநுராதபுரம் மற்றும் பத்தரமுல்லை கிளைகளில் 02 வங்கிக் கணக்குகளின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வங்கி இணக்கக் கூற்று தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அவை கணக்காய்வுத் திகதியில் செயலிழந்த கணக்குகளுக்கு உட்பட்டிருந்த போதும் அது தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முகாமைத்துவத்தால் கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வங்கி இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சிற்குரிய இலக்கம் WP UL 1769 என்ற மோட்டார் சைக்கிள் பல வருட காலத்திலிருந்து ஓட்ட நிலையில் காணப்படாதிருந்ததுடன் பழுதுபார்த்து பொருளாதார ரீதியாக நலன் வாய்ந்ததா என என்பது தொடர்பாக எந்தவொரு பரிசோதனையும் இன்றி காணப்பட்டது. | முகாமைத்துவத்தால் கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் பயனுள்ளதாக என கண்டறிதல் வேண்டும். |

### 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் PF-0628 என்ற வாகனத்தின் 2022 ஆகஸ்ட் 04 ஆம் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பான பாதிப்பின் இழப்பின் பெறுமதி ரூபா 323,600 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக அதன் சாரதி பொறுப்பாக இருந்தமை பரிசோதனை சபையின் அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PF-0628 என்ற வாகனம் முன்னாள் அமைச்சருக்கு வழங்கப்பட்ட வாகனமாகும். இந்த விபத்து தொடர்பாக அமைச்சிற்கு அறிவிக்கப்படாதிருந்ததுடன் பொலிஸிலும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 104(3) இன் ஆரம்ப விசாரணையின் இந்த பரிசோதனை அறிக்கையின் படி சாரதி பொறுப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. நட்டம் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பித்தல் தற்போது நிதிப் பிரமாணம் 104(4) இறைப் பரிசோதனை சபை நியமிக்கப்பட்டுள்ளது. இறுதிப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | சாரதியிடமிருந்து அறவிடல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கைப்பெற்றப்பட்ட காணிகளுக்காக இழப்பீடை செலுத்துவதற்குத் தேவையான ரூபா 2,513,476,724 ஆன நிதி ஏற்பாடு 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த | நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் திறைசேரி கட்டுநிதி விடுவித்தல் மேற்கொண்டமையினால் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் கட்டுநிதி பெறுமளவு மற்றும் இழப்பீட்டு நலனாளிகளுக்கு பணத்தை விடுவித்தல் தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் | உள்ளபடியாக இழப்பீடு செலுத்தப்பட்ட பெறுமதி தொடர்பாக உறுதிப்படுத்தளைப் பெற்று சேமிப்பு வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் உரிய நிதி ஏற்பாடு இழப்பீட்டு நலனாளிகளுக்கு செலுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறிக்கை கோரப்படுகின்றது. அவ்வாறே எதிர்காலத்தில் பிரதேச செயலகங்களை தொடர்புபடுத்துவதற்கான தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தரவு முறையொன்று தயாரிக்கப்படுகின்றது. | |
| (ஆ) | மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவில் கந்தர மற்றும் தளல்ல கிராமங்களில் அமைந்துள்ள 10 ஏக்கர் 02 றூட் 27.26 பேர்ச் காணி கந்தர கடற்தொழில் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான காணியைப் கைப்பெற்றும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் பிரசுரித்தல் 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப ஏற்பாடுகள் கட்டளை 2022 பெப்ரவரி 10 ஆம் திகதிய இலக்கம் 2266/51 என்ற வர்த்தமானியில் பிரசுரித்து அதற்காக இழப்பீடு செலுத்துவதற்கு ரூபா 31,500,000 நிதி கடற்தொழில் அமைச்சினால் தெவிநுவர பிரதேச செயலகத்திற்கு 2021 சனவரி 06 ஆம் திகதி செலுத்தப்பட்ட போதிலும் இழப்பீட்டு உரிமையாளருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பிரதேச செயலகத்திற்குரிய நடைமுறைக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த | ஏதாவது நிறுவனத்திற்கு, திணைக்களத்திற்கு அல்லது அமைச்சிற்காக காணி ஒன்று தேவையானவிடத்து அதற்காக வன மதிப்பீடு செய்யப்பட்ட தொகை உரிய பிரதேச செயலகத்தில் வைப்பிலிடுதல் அல்லது நிதிப் பிரமாணம் 53 அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் அதனை கைப்பெற்றுதல் ஆரம்பிக்கப்படுகின்றது. கைப்பெற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தி உரித்துறுதியை பரீட்சித்து காணப்படுகின்ற உரித்துறுதி தீர்மானத்தின் பின்னர் இழப்பீடு செலுத்தப்படுகின்றது. தற்போது இந்த கைப்பற்றல் சட்டத்தின் 7 ஆம் பிரிவில் காண்பிக்கும் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வட்டி செலுத்தாத முறையில் உரிய காணியைக் கைப்பெற்றும் நடவடிக்கைகளை ப் பூர்த்தி செய்து விரைவாக இழப்பீடு செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | து. இதன் காரணமாக இழப்பீட்டிற்காக செலுத்த வேண்டிய வட்டிப் பணம் அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இலக்கம் 253-3555 என்ற வாகனத்தின் உள்ளக பழுதுபார்த்தல்களுக்காக 2020 செப்டெம்பர் 30 ஆம் திகதி கூறுவிலை கோரி ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த தலவத்துகொட பிரதேசத்தில் தனியார் அங்கீகரிக்கப்பட்ட கராஜிற்கு ரூபா 389,000 மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டில் பழுதுபார்த்தலுக்காக கையளிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அந்த கராஜில் நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் ஒரு தடவை கூறுவிலை கோரி ரூபா 1,020,000 தொகையில் பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு 2023 மார்ச் 28 ஆம் திகதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. வாகனத்தின் எஞ்சின் இலக்கம் (4D56JSO 455) மற்றும் பதிவுச் சான்றிதழில் எஞ்ஜினின் இலக்கம் (JWYJNK 340 WP 0129) ஒன்றுக்கொன்று வித்தியாசமான மையினால் இந்த வாகனம் பழுதுபார்ப்பதற்கு தாமதமாக இருந்தமை மேலும் அவதானிக்கப் பட்டதுடன் அந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக | இலக்கம் 253-3555 என்ற வாகனத்தின் எஞ்ஜின் தொடர்பாக பழுதுபார்த்தல் ஒன்று ஏற்பட்டமையினால் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் கீழ் இந்திக்க மோட்டஸ் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு பாகங்கள் கழற்றிப் பார்த்து 2020.09.30 ஆம் திகதி ரூபா 389,000 விலை மதிப்பீட்டிற்காக பரிந்துரை பெற்றுக்கொள்வதற்கு வாகனம் இயந்திரப் பொறியியலாளருக்கு அனுப்பட்ட போது அதன் பதிவு எஞ்ஜின் இலக்கம் இணங்காதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் காணப்பட்ட COVID 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக கடமைகளுக்காக இடையூறாக இருந்தமையால் அந்த திணைக்களத்திலிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்தது. அதன் போது வாகனம் மோட்டார் போக்குவரத்து பரிசோதகருக்கு காண்பித்து அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை கிடைத்திருந்ததுடன் அதற்காக பொருத்தமான மோட்டார் வாகனப் பரிசோதகரின் | எஞ்ஜின் இலக்கம் மாறுபட்டது எவ்வாறு என பரிசோதனை செய்து அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

அமைச்சினால் விரைவாக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பழுதுபார்த்தலுக்காக அமைச்சிற்கு ரூபா 631,000 மேலதிக கிரயம் ஒன்றை செலுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு பல தடவைகள் எழுத்து மூலம் மற்றும் வாய் கோரப்பட்ட போதிலும் காணப்பட்ட நிலைமையின் இடையே அந்த உதவி கிடைத்திருக்கவில்லை.
பின்னர் இந்த அமைச்சிற்கு நியமிக்கப்பட்ட இயந்திரப் பொறியலாளரால் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு எடுத்துச் சென்று பிரச்சினைகளை சமர்ப்பித்ததன் பின்னர் பழுதுபார்த்து வேரஹர கிளைக்கு அனுப்பி பரிசோதனை செய்ய வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாகனம் ஓட்ட நிலையில் காணப்படாதிருந்தமையால் இயந்திரப் பொறியியலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் கீழ் இந்திக்க மோட்டஸ் நிறுவனத்திலிருந்து புதிய கூறுவிலை மதிப்பீடொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் போது 2023.01.09 ஆம் திகதிய ரூபா 1,020,000 விலை மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளின் இடையே தற்போதைய சந்தையில் மோட்டார் வாகனங்களின் உதிரிப் பாகங்கள் அசாதாரண மாக விலை அதிகரித்திருந்தமையினால் புதிய விலை மதிப்பீட்டின் கீழ் பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கு சிறிய பெறுகைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக சகல இயந்திர பரிந்துரைகளும் கல்வி

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சிற்கு நியமிக்கப்பட்டுள்ள இயந்திரப் பொறியியலாரிடமிருந்தும் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. இதன் போது நடைமுறையில் அநேகமான தாமதங்கள் ஏற்பட்டிருந்த பிரயோக ரீதியில் அநேகமான தாமதங்கள் ஏற்பட்டிருந்ததுடன் தற்போது பழுதுபார்த்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பதிவுச் சான்றிதழை சரிசெய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதையும் அறியத்தருகின்றோம். | |
| (ஈ) | மொறகஹஹேன உப நகர அபிவிருத்திக்காக களுத்துறை மாவட்டத்தில் ஹொரண பிரதேச செயலகப் பிரிவில் மொறகஹஹேன கிராம வரைபட இலக்கம் 4406 இல் 01 ஏக்கர் 02 றூட் 20 பேர்ச் காணி (ஹெக்டேயர் 0.6545) கைப்பெற்றிக் கொள்வதற்கான விண்ணப்பம் 2007 செப்டெம்பர் 06 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் புன்னிய பூமி அபிவிருத்தி அமைச்சில் இருந்து கிடைத்து 2008 யூலை 31 ஆம் திகதிய வர்த்தமானி இலக்கம் 1560/16 இன் மூலம் 38(அ) உப ஏற்பாடுகள் பிரசுரித்து காணியின் உரித்து கையேற்கப்பட்டிருந்தது. காணியின் உரித்தை அரசாங்கத்திற்கு கையேற்று 05 | இந்த கைப்பெற்றல்களுக்குரியதாக தயாரிக்கப்பட்ட ஆரம்ப நில வரைபடத்தில் 26 கூறுகள் உள்ளதுடன் அந்த ஒவ்வொரு கூறுகளும் தனித்தனியாக அந்த உரித்துறுதியைப் பரீட்சிக்க வேண்டியிருந்ததுடன் அதன் ஒவ்வொரு கூறுகளுக்காகவும் சமர்பிக்கப்படுகின்ற பிரச்சினைகள் பல்வேறு வகையாகும் அதனால் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக காணி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இழப்பீடுகளை மீளாய்வு செய்யும் சபை போன்ற நிறுவனங்களின் மூலம் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதனால் உரித்துறுதியைப் பரீட்சிப்பதற்காக எடுக்கின்ற காலத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் | சிக்கனமற்ற வட்டி செலுத்தாத முறையில் இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கு பின்னர் காணிக்காக உரித்து சமர்ப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டுப் பணம் உரித்தான நபரின் பெயர், முகவரி, காணியின் விபரம் மற்றும் இழப்பீட்டுத் தொகை தொடர்பாக காண்பிக்கின்ற விபரங்கள் 17 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிப்பதற்கு 7 ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து 06 வருட காலம் எடுத்திருந்தது. இதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்காக 12 வருடங்கள் அளவிலான காலத்தை விஞ்சியதன் காரணமாக கூறு இலக்கம் 1, 10, 11, 14 இற்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டு தொகையான ரூபா 26,180,250 இற்காக வட்டிப் பணமாக ரூபா 24,227,134 சிக்கனமற்ற கொடுப்பனவொன்று மேற்கொள்ள வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கைப்பெற்றல் செயற்பாடுகளை செயற்திறனாக்குவதற்காகவும் மற்றும் காணப்படுகின்ற நலிவுகளைக் குறைப்பதற்காகவும் கைப்பெற்றல் சட்டத்தில் திருத்தங்களுக்கு உரிய ஆரம்ப வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் கைப்பெற்றல் கோவைகளில் பின் தொடர் நடவடிக்கைகளுக்கான தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தரவு முறையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது பிரதேச செயலக மட்டத்திலும் பரவலாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (உ) | முப்படை தலைமையத்தை மறுசீரமைக்கும் செயற்திட்டத்திற்கு கொழும்பு மாவட்டத்தில் கடுவவெல பிரதேச செயலகப் பிரிவில் தளங்கம தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள ஹெக்டேயர் 0.492 அளவான 274 காணிக் கூறுகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2013 யூன் 26 ஆம் திகதி கைப்பெற்றும் கோரிக்கை, | பொது பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நிறுவனங்களினால் அந்தக் காணியில் காணப்படுகின்ற அருகதைத் தன்மைகளை உள்ளடக்கிய ஏனைய வளங்களைப் பரீட்சித்ததன் பின்னர் காணி கைப்பெற்றும் முன்மொழிவு தயாரித்து காணி அமைச்சிற்கு அனுப்பப்படுகின்றது. சட்டத்தின் 38(அ) உப ஏற்பாடுகள் விநியோகிப்பதற்காக முன்னாள் கௌரவ | சிக்கனமற்ற வட்டி செலுத்தாத முறையில் இழப்பீடு செலுத்துதல் வேண்டும். |

அமைச்சிற்கு அனுப்பப் பட்டிருந்தது. எனினும் காணி கைப்பெற்றல் சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 248 ஆம் கட்டளை (அ) இன் பிரகாரம் ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொண்டு காணியின அருகதை நன்மை, வினைத்திறன், காணி கைப்பெற்றல் காணியின் உரிமையாளருக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் போன்றவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே சட்டத்தின் 38 ஆவது பிரிவின் கீழ் அவசர தேவை விடயமொன்றிற்காக காணி உரித்தை கையேற்றல் தேவையானதாக இருந்து கோரிக்கை விடப்பட்டு பொறுப்பான அமைச்சரின் அறிவித்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவு ம் அவ்வாறு இல்லாமல் உப ஏற்பாடுகள் வர்த்தமானியில் பிரசுரித்த விண்ணப்பம் அனுப்பப்பட்ட திகதியில் இருந்து அரசாங்கத்திற்கு காணியைக் கையேற்றல் மேற்கொள்ளுதல் அதாவது 38(அ) உப கட்டளை பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து 01 வருடம் மற்றும் 06 மாத காலத்தின் பின்னர் அதாவது 2015 யூலை 16 ஆம் திகதி உரிய காணி கொழும்பு மாவட்ட செயலாளருக்கு கையேற்று அரச பாதுகாப்பு அமைச்சிற்கு இராஜாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரினால் 2014.09.19 ஆம் திகதி பரிந்துரை அனுப்பப் பட்டிருந்தது. 38(அ) உப ஏற்பாடுகள் விநியோகித்ததன் பின்னர் உரிய வர்த்தமானி பகிரங்கப்படுத்தியதன் பின்னர் உரித்தைக் கையேற்கும் செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் 38(அ) உப ஏற்பாடுகளில் 272 கூறுகளுக்காக விநியோகிக்கப்பட்டிருந்தமைய ால் இதற்காக கவனத்திற் கொள்ளக்கூடிய காணி காலம் எடுத்திருந்தது. இந்த கைப்பெற்றல்களுக்குரிய காணியின் உரிமையாளர்களிடமிருந்து உரித்தினை கையேற்கின்ற சந்தர்ப்பத்தின் போது அந்தக் காணி கூறுகளின் உரித்து உரிய நிறுவனத்திற்கு வழங்க வேண்டியிருந்தமையால் உரித்தினை கையளித்தல் ஒவ்வொரு நாளாக கழித்தல் ஒரு தினமொன்றாகக் குறிப்பிட முடியாதிருந்தது. தேசிய பாதுகாப்பு தொடர்பாக செயற்படுகின்ற இந்த கைப்பெற்றல்களுக்குரிய நிருவாக செலவினம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செலுத்தியதன் காரணமாக, இழப்பீடு செலுத்துவதற்கு முன்னர் நிதிப் பிரமாணம் 53 இல் அங்கீகாரம் பெறப்படுகின்ற அடிப்படையின் கீழ் கைப்பெற்றல்கள் அமுல்படுத்தப்படுகின்றது. இழப்பீடு செலுத்துவதற்கு முன் நிதிப் பிரமாணம் 53 இல் அங்கீகாரம் பெற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

காணி கையளித்தல் எப்போது மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பான தகவல்கள் அமைச்சினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிப் பிரமாணம் 53(4) மற்றும் (5) இன் பிரகாரம் கைப்பெற்றப்பட்ட காணிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகளின் பட்டோலைகள் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் வரவுத் செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சட்டத்தின் 38(அ) உப ஏற்பாடுகளின் கீழ் வருகின்ற கால எல்லையில் வட்டித் தொகையும் இழப்பீட்டு உரிமையாளருக்கு செலுத்த வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த கைப்பெற்றப்பட்ட காணிக்காக அமைச்சினால் வட்டி செலுத்துவதற்காக நிதி ஏற்பாடு விடுவிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் 7 சதவீதப்படி வட்டி செலுத்த வேண்டிய வருடங்களின் எண்ணிக்கை 03 இற்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான காலமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளடியான | வெற்றிடம் |
|---|---|---|---|
| | ------ | ------ | ------ |
| சிரேஷ்ட | 35 | 27 | 08 |
| மூன்றாம் | 05 | 03 | 02 |
| இரண்டாம் | 546 | 533 | 13 |
| ஆரம்ப | 51 | 30 | 21 |
| ஏனையவை | 03 | 01 | 02 |
| | 640 | 594 | 46 |
| | ----- | ------- | -------- |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதற்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.<br><br>(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 640 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 594 ஆனமையால் 46 வெற்றிடங்கள் காணப்பட்டன.<br><br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட நிலையில் பதவிகள் 08 பேர்களையும், மூன்றாம் நிலையில் 02 பேர்களையும், | 2022.12.31 இல் உள்ளவாறு சிரேஷ்ட, இரண்டாம், மூன்றாம் நிலைக்குரிய பதவி வெற்றிடங்கள் தொடர்பாக அரச நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. திணைக்கள மயப்படுத்தப்பட்ட பதவியான ஆவணப் பதிவாளர் (சிங்களம்) பதவிக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 ஆலோசனையின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்குதல் | வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |

இரண்டாம் நிலையில் 13 பேர்களையும், ஆரம்ப நிலையில் 21 பேர்களையும், ஏனையவை பதவிகளில் 02 பேர்களையும் உள்ளடக்கி 46 பேர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன.

நிறுத்தப்பட்டுள்ளது.

பதவிகளில் அத்தியவசியத்தின் அடிப்படையில் (ஆவணப் பதிவாளர் - சிங்களம், சட்ட உத்தியோகத்தர் பதவிகள்) ஆட்சேர்ப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆட்சேர்க்கும் நடைமுறைகளை மீளாய்வு செய்யும் அமைச்சரவை உத்தியோகத்தர் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.